

திருக்கோவிலூர் சட்டமன்ற தொகுதி முகையூர் ஒன்றியம், கொடுங்கால், ஆற்காடு, முகையூர் மற்றும் ஆயந்தூர் ஊராட்சியில் உள்ள தேவாலயங்களில் வனத்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி, 2025 ஆம் ஆண்டுக்கான நாள்காட்டி, கையேடு மற்றும் இனிப்புகளை வழங்கி ஆங்கில புத்தாண்டு வாழ்த்துக்களை தெரிவித்தார். மாவட்ட ஊராட்சி குழு தலைவர் ம.ஜெயச்சந்திரன், மாவட்ட துணை செயலாளர்கள் டி என் முருகன், தயா இளந்திரையன், ஒன்றிய செயலாளர்கள் ஜி ரவிச்சந்திரன், லூயிஸ் மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர் எம்.ஆர். ராஜீவ் காந்தி, முன்னாள் ஒன்றியச் செயலாளர் பிரேமா அல்போன்ஸ், மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் அமுதா காத்தவராயன் உள்ளிட்ட ஒன்றிய நிர்வாகிகள், கிளைக் கழக நிர்வாகிகள் பலர் உடன் இருந்தனர்.



நாகை மாவட்டம் வேதாரண்யம் மேற்கு ஒன்றியம் தென்னடார் ஊராட்சி மன்ற தலைவரும் அ.இ.அ.தி.மு.க ஒன்றிய இணை செயலாளருமான தேவி செந்தில் அவருடையை கணவர் செந்தில் தென்னடார் கிளை கழக செயலாளர் த.ராஜா ஆகியோர் அ.தி.மு.க.வில் இருந்து விலகி நாகை மாவட்ட பொறுப்பு அமைச்சரும் பள்ளி கல்வித்துறை அமைச்சருமான அன்பில் மகேஸ் பொய்யாமொழி முன்னிலையில் கழகத்தில் இணைந்தனர். உடன்நாகை மாவட்ட கழக செயலாளர், தமிழ்நாடு மீன் வளர்ச்சி கழக தலைவர் என். கௌதமன், ஒன்றிய கழக செயலாளர்கள் வேதாரணியம் மேற்கு உதயம் வே. முருகையன், தலைஞாயிறு மகா. குமார், மாவட்ட விவசாய தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் பாபு ஆகியோர் உள்ளனர்.

### கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டச் செயலாளர் தே. மதியழகன் எம்.எல்.ஏ. தலைமை

## கிருஷ்ணகிரி கிழக்கு, மேற்கு, தர்மபுரி கிழக்கு, மேற்கு மாவட்ட வழக்கறிஞர்கள் அணி கூட்டம்!

### மாவட்டச் செயலாளர்கள் ஒய். பிரகாஷ் எம்.எல்.ஏ. , தடங்கம் சுப்பிரமணி, பழனியப்பன், சட்டத்துறை இணை செயலாளர் தாமரைச்செல்வன், துணை செயலாளர் மருது கணேஷ் பங்கேற்பு!

கிருஷ்ணகிரி, ஜன.2-

கிருஷ்ணகிரி மற்றும் தர்மபுரி மாவட்ட திமுக வழக்கறிஞர்கள் அணி ஆலோசனை கூட்டம் நடந்தது. இணை செயலாளர் தாமரைச்செல்வன், கிருஷ்ணகிரி கிழக்கு, மேற்கு, தர்மபுரி கிழக்கு, மேற்கு மாவட்ட வழக்கறிஞர்கள் அணி ஆலோசனைக் கூட்டம் கிருஷ்ணகிரியில் நடந்தது. கூட்டத்திற்கு கிருஷணகிரி கிழக்கு மாவட்ட செயலாளர் மதியழகன் எம் எல்ஏ., தலைமை வகித்தார்.

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட வழக்கறிஞர்கள் அணி அமைப்பாளர் வெங்கடேஷ் ராஜா, மேற்கு மாவட்ட அமைப்பாளர் திம்மராயப்பன், தர்மபுரி கிழக்கு மாவட்ட அமைப்பாளர் சந்திரசேகர், மேற்கு மாவட்ட அமைப்பாளர் சிவம் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்திற்கு இணைச் செயலாளர் தாமரைச் செல்வன், சட்டத்துறை துணைச் செயலாளர் மருது கணேஷ் ஆகியோர் பஙகேற்று ஆலோசனை வழங்கி பேசினர். கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட செயலாளர் பிரகாஷ் எம்.எல்.ஏ., தர்மபுரி மேற்கு மாவட்ட செயலாளர் பழனியப்பன், கிழக்கு மாவட்ட செயலாளர் தடங்கம் சுப்பிரமணி ஆகியோர் பேசினர். ஒசூர் மாநகராட்சி மேயர் சத்யா வாழ்த்துரை வழங்கினார். கூட்டத்தில், வரும் 2025ம் ஆண்டு ஜனவரி மாதம் 12ம் தேதி சென்னையில் தி.மு.க., சட்டத்துறையின் சார்பில் நடக்கும் 3வது மாநில மாநாட்டில் கிருஷ்ணகிரி, கிழக்கு, மேற்கு, தர்மபுரி கிழக்கு, மேற்கு மாவட்டங்களின் சார்பில், 500 வழக்கறிஞர்கள் கலந்து கொள்வது எனவும் . அரூரில் கூடுதல் மாவட்ட நீதி மன்றம் அமைக்க வேண்டும். போச்சம்பள்ளியில் சார்பு நீதிமன்றம் அமைக்க வேண்டும். வழக்கறிஞர்கள் சேமநல நிதியினை 10 லட்சமாக உயர்த்தி வழங்கிய தமிழக முதல்வருக்கு நன்றி தெரிவிப்பது. 2026ல் நடக்க உள்ள சட்ட மன்ற தேர்தலில், 7வது முறையாக தி.மு.க. வெற்றி பெற்று முதல்வர் மு.க.ஸ்டாலினை மீண்டும் முதலமைச்சராக்கிட வழக்கறிஞர் அணி அயராது பாடுபடும். சூளகிரியில் தமிழக அரசு விரைவாக நீதிமன்றத்தை அமைக்க வேண்டும் என்பது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன.

கூட்டத்திற்கு கிருஷ்ணகிரி கிழக்கு , மேற்கு தர்மபுரி கிழக்கு, மேற்கு மாவட்ட துணை, அமைப்பாளர்கள், தலைவர்கள், துணை தலைவர்கள், அரசு வழக்கறிஞர்கள் மற்றும் கழக வழக்கறிஞர்கள், பெண் வழக்கறிஞர்கள் ஏராளமானோர் கலந்துக்கொண்டு சிறப்பித்தார்கள்

தர்மபுரி கிழக்கு மாவட்ட அமைப்பாளர் சந்திரசேகர் நன்றி உரையாற்றினார்.

## திருவாரூரில் தி.மு.க. சட்டத்துறை மத்திய மண்டல ஆலோசனைக் கூட்டம்!

### சூர்யா வெற்றிகொண்டான் - பூண்டி.கலைவாணன் பங்கேற்பு!

திருவாரூர், ஜன. 2-

திருவாரூரில் தி.மு.க. சட்டத்துறை மத்திய மண்டலம் இரண்டின் வழக்கறிஞர் அணி ஆலோசனைக் கூட்டம் மாவட்டச் செயலாளர் பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்றது.

மாநில சட்டத்துறை இணைச் செயலாளரும், மண்டலம் இரண்டின் பொறுப்பாளருமான வழக்கறிஞர் சூர்யா வெற்றி கொண்டான் , தலைமைக்கழக வழக்கறிஞர் நாகை மு.தினேஷ் குமார் சிறப்பு அழைப்பாளராக பங்கேற்றனர். கூட்டத்தை மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் வழக்கறிஞர் என். விநாயக மூர்த்தி ஒருங்கிணைத்து நடத்தினார்.

கூட்டத்தில் சிறப்புரையாற்றிய மாவட்ட செயலாளர் பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ. வழக்கறிஞர் சேம நல நிதிக்கு திருவாரூர் மாவட்ட கழகம் சார்பில் தனது பங்களிப்பாக ரூபாய் ஐந்து லட்சம் வைப்புத்தொகை வழங்குவதாக அறிவித்தார்.

கூட்டத்திற்கு மாவட்ட அமைப்பாளர் என்.விநாயக மூர்த்தி வரவேற்புரையாற்ற ,நகர செயலாளர் வாரை. எஸ்.பிரகாஷ் ,ஒன்றிய செயலாளர்கள் புலிவலம் ஏ.தேவா, சேகர் கலிய பெருமாள், நா.கவியரசு, ஐ.வி. குமரேசன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாவட்ட வழக்கறிஞர் அணி தலைவர் வழக்கறிஞர் ஜி.பஞ்சமூர்த்தி நன்றி கூறினார். மாவட்ட வழக்கறிஞர் அணி நிர்வாகிகள் கோவி.கண்ணன், டி. செல்லப்பா, எம்.குமணவள்ளல், என்.மகாலெட்சுமி,ஜி. வீரகுமார், ஜி.சிலம்பரசன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

இந்த ஆலோசனை கூட்டத்தில் எதிர்வரும் சென்னை சட்டத்துறை மாநாட்டில் பங்கேற்றல், 2026சட்டமன்ற தேர்தலில் கழக கூட்டணி 200க்கும் அதிகமான இடங்களில் வெற்றிபெற உழைப்பது, வழக்கறிஞர் அணிக்கு புதிய உறுப்பினர்களை சேர்ப்பது, உலக செஸ் சாம்பியன் குகேஷ்க்கு வாழ்த்துக்களை தெரிவித்தல், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் சிறப்பான செயல்பாடுகளுக்கு பாராட்டுக்கள் தெரிவித்தல், சட்டமேதை அண்ணல் அம்பேத்காரை அவமதித்த பா.ஜ.க. உள்துறை அமைச்சர் அமித்ஷாவுக்கு கண்டனம் உள்ளிட்ட தீர்மானங்களும், மறைந்த முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங் அவர்களுக்கு இரங்கல் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.



நாகை மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டம் நாகையில் மாவட்டக் கழக அலுவலகத்தில் கூட்ட அரங்கில் நடைபெற்றது. கூட்டத்தில் நாகை மாவட்டக் கழகச் செயலாளர் என்.கௌதமன் பேசினார். உடன் சட்டமன்ற தொகுதி பார்வையாளர்கள் ஆர்.அருள்செல்வம், இரா.சங்கர், வி.ஜெயபிரகாஷ், தாட்கோ தலைவர் உ.மதிவாணன், மாநில விவசாய அணி துணைத்தலைவர் எஸ்.கே.வேதரத்தினம், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் க.இராஜேந்திரன், ப.கோவிந்தரசான், இல.மேகநாதன், மறைமலை, மாவட்டக் கழக நிர்வாகிகள் மு.லோகநாதன், ஆரூர்.மணிவண்ணன், சோ.ரவிச்சந்திரன், மாநில மீனவர் அணி துணைச் செயலாளர் ஜி.மனோகரன் மற்றும் பலர் உள்ளனர்.



# தி.மு.க. இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

## சட்டமன்றத் தொகுதி வாரியாக பாக இளைஞர்களுக்கு சமூக வலைத்தளப் பயிற்சி

### இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களது அறிவுறுத்தலின் பேரில், பாகத்திற்கு ஓர் இளைஞரைத் தேர்வு செய்து, சட்டமன்றத் தொகுதி வாரியாக சமூக வலைத்தளப் பயிற்சி வழங்கி வருகிறோம். மண்டலம் 3, 4–இல் பத்து சட்டமன்றத் தொகுதிகளுக்கான சமூக வலைத்தளப் பயிற்சி கீழ்க்காணும் நாட்களில் நடைபெற இருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

| நாள் | நேரம் | மண்டலம் | சட்டமன்றத் தொகுதி | இடம் |
|---|---|---|---|---|
| 04.01.2025 சனிக்கிழமை | காலை 10.00 மணி | 3 | திருப்பத்தூர் | டி.என்.டி அருண் மஹால், திருப்பத்தூர். |
| | மாலை 3.00 மணி | | ஜோலார்பேட்டை | ராஜாராஜேஸ்வரி திருமண மண்டபம், ஜோலார்பேட்டை. |
| 05.01.2025 ஞாயிற்றுக்கிழமை | காலை 10.00 மணி | | வாணியம்பாடி | செங்குந்தர் திருமண மண்டபம், வாணியம்பாடி. |
| | மாலை 3.00 மணி | | ஆம்பூர் | கிருஷ்ணாலாயா திருமண மண்டபம், ஆம்பூர். |
| 03.01.2025 வெள்ளிக்கிழமை | காலை 10.00 மணி | 4 | இராசிபுரம் | பூவாய் அம்மாள் திருமண மண்டபம், இராசிபுரம். |
| | மாலை 3.00 மணி | | சேந்தமங்கலம் | ஐஸ்வர்யா மஹால், சேந்தமங்கலம். |
| 04.01.2025 சனிக்கிழமை | காலை 10.00 மணி | | நாமக்கல் | நளா ஹோட்டல், திருச்சி சாலை, நாமக்கல். |
| 05.01.2025 ஞாயிற்றுக்கிழமை | காலை 10.00 மணி | | பரமத்தி வேலூர் | ஆர்.கே. திருமண மண்டம், பொத்தனூர், பரமத்தி வேலூர். |
| | மாலை 3.00 மணி | | திருச்செங்கோடு | நந்தா டவர்ஸ், சங்ககிரி சாலை, திருச்செங்கோடு. |
| 06.01.2025 திங்கட்கிழமை | காலை 10.00 மணி | | குமார பாளையம் | ரெயின்போ மஹால், கத்தேரி புறவழிச்சாலை, குமாரபாளையம். |

அந்தந்த சட்டமன்றத் தொகுதி பாகங்களில், இப்பயிற்சிக்காகத் தேர்வு செய்யப்பட்டுள்ள இளைஞர்கள் தவறாமல், இதில் பங்கேற்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

"அன்பகம்"
தேனாம்பேட்டை
சென்னை-18
நாள் : 01-01-2025

உதயநிதி ஸ்டாலின்
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி

### நாமக்கல் கிழக்கு மாவட்ட

## மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணிகளுக்கான ஆலோசனைக் கூட்டம்

### மாவட்டக் கழகச் செயலாளர் கே. ஆர். என். இராஜேஸ்குமார் எம். பி. அறிவிப்பு!

நாமக்கல், ஜன. 2-

நாமக்கல் கிழக்கு மாவட்டச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கித் தலைவருமான கே.ஆர்.என். இராஜேஸ்குமார் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அதில், நாமக்கல் கிழக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட மாவட்ட மகளிர் அணி மற்றும் மகளிர் தொண்டர் அணிகளுக்கான ஆலோசனைக் கூட்டம் நாமக்கல் திருச்சி சாலையில் உள்ள நளா ஹோட்டலில் இன்று (02.01.2025-வியாழக்கிழமை) காலை 11.00 மணிக்கு நடைபெறும்.

இக்கூட்டத்தில் ஒன்றிய, நகர, பேரூர்களுக்கான மகளிர் அணி மற்றும் மகளிர் தொண்டர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் கலந்து கொள்ளுமாறு அறிவித்துள்ளார்.

இக்கூட்டத்தில், பூத் வாரியாக மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி நிர்வாகிகளை நியமிப்பது சம்மந்தமாக ஆலோசனை நடத்தப்பட உள்ளது.

இக்கூட்டத்தில் ஒன்றிய, நகர, பேரூர் மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி நிர்வாகிகள் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.



கடலூர் மாவட்டம் நெய்வேலி சட்டமன்ற தொகுதி நடுக்குப்பம் ஊராட்சி நன்னி தெருவைச் சேர்ந்த மருத்துவர் செந்தில்குமார் பாட்டாளி மக்கள் கட்சி, அ.தி.மு.க.வைச் சேர்ந்த நடுக்குப்பம் ஊராட்சி மன்ற தலைவர் சக்திவேல் தலைமையில் 200க்கும் மேற்பட்ட நிர்வாகிகளுடன் நெய்வேலி சட்டமன்ற உறுப்பினர் சபா. இராஜேந்திரன் முன்னிலையில் திராவிட முன்னேற்றக் கழகத்தில் இணைந்தனர்.இந்நிகழ்ச்சியில் பண்ருட்டி ஒன்றிய பெருந்தலைவர் சபா.பாலமுருகன்,கழக பொதுக்குழு உறுப்பினர் க.அறிவழகன், மாவட்ட பிரதிநிதி ஆடலரசன், ஒன்றிய துணை செயலாளர்,சுமதி நந்தகோபால்,ஒன்றிய கவுன்சிலர் அருள்முருகன், ஊராட்சி மன்ற தலைவர் சக்திவேல்,ஒன்றிய துணை செயலாளர் ஏழுமலை,கிளை செயலாளர் புருஷோத்தமன்,தகவல் தொழில்நுட்ப அணி ஆனந்தன், காட்டாண்டிக் குப்பம் செந்தில்,நடுக்குப்பம் ரங்கநாதன், சக்கரவர்த்தி, சாமிதுரை,சிசுபாலன் பழனி,ஆறுமுகம் சுப்பிரமணியன்,பிரகாஷ், முத்துசாமி, மாயசுந்தரவேல்,தேவராஜ் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.